Ye have not chosen me, but I have chosen you, and ordained you, that ye should go and bring forth fruit, and that your fruit should remain

ஆவியின் கனி

சர்வதேச அறுவடையாளர்கள் தமிழ் திருச்சபை

துபாய்

வாலிபர் ஊழியம்

சகோ. பாலச்சந்திரன்

ஆவியின் கனி

கர்த்தரோடு இசைந்து
உற்பத்தி செய்யப்படுகிறது
யோ15:5

(Process) Luk 13:8



ஆவிக்குரிய வரங்கள்

கர்த்தரால் கொடுக்கப்படுகிறது

தெய்வீக குறிக்கோள்

நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருககும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

யோவான் 15:16



எங்கே நடப்படவேண்டும்

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும.

சங் 1:1-3



சபையிலே நடப்படவேண்டும்

சபை கூடிவருதலைச் சிலர்விட்டுவிடுகிறதுபோல
நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர்
புத்திசொல்லக்கடவோம் எபி 10:25

கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள்
எங்கள் தேவனுடைய பிராகாரங்களில்
செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும்,
என் கன்மலையாகிய அவரிடத்தில்
நீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி,
அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து,
புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்.

சங் 92:12-15

இயேசு கிறிஸ்துவுக்குள் நிலைத்திருங்கள்

யோ15:4

என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, **நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.**

யோ15:5

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். **ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;** என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

கொலே2:6

ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர் களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு,

கனி கொடுக்கும் உன்னத முறை

1. கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிய வேண்டும்

கர்த்தரின் வசனத்தை தியானிக்கும் பொழுது, ஆவியானவர் நம்மோடு இடைப்பட்டு சில சுபாவங்களை மாற்றும் படியாக பேசுவார். உடனடியாக செவி கொடுப்போமானால் அவரோடு இணைந்து கனி கொடுக்கிற வர்களாக மாறுவோம்.

கனி கொடுக்கும் உன்னத முறை

2. பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்படிய வேண்டும்

வேதம் சொல்லுகிறது

- ரோ8:14 — ஆவியானவர் நம்மை நடத்துவார்
- யோ16:8 — பாவங்களை கண்டித்து உணர்த்துவார்
- யோ16:13 — வருங்காரியங்களை உணர்த்துவார்

ஆவியானவர் நம்முடைய ஆவி யிலே பேசுகிர காரி யங்களை கேட்டு உடனே கீழ்படியும் பொழுது அவரோடு இணைந்து கனி கொடுக்க முடியும்

குறிப்பு: நம்முடைய மன விருப்பத்தின் படியல்ல ஆவியானவருடைய விருப்பத்தின்படி செய்யும்பொழுதுதான் கனி கொடுக்க முடியும்

கனி கொடுக்கும் உன்னத முறை

3. சூழ்நிலைகள் கர்த்தர் அனுமதிப்பார்

உதாரணமாக யோசேப்புக்கு கர்த்தர்,

- குழி,
- அடிமை
- சிறைச்சாலை

அனுபவங்களை அனுமதித்து

ஆதி 49:22 — கர்த்தர் அவனை கனிதரும் செடியாக மாற்றினார்

குறிப்பு: கர்த்தர் சூழ்நிலைகளை அனுமதிக்கும் (களை எடுக்கும்) பொழுது, வேதனைகளும் பாடுகளும் வரநேரிடும் இவை எல்லாம் நன்மைக்கே ரோ 8:28

கனி கொடுக்கும் உன்னத முறை

4. அர்ப்பணிப்பு

- குயவன் கையில்லுள்ள களிமண்ணாக
- மேய்ப்பன் கைக்குள்ளான ஆடாக
- நிலத்தில் விதைக்கப்பட்ட கோதுமை மணியாக

அர்ப்பணிப்போமானால் மாமிச சிந்தனை அழிந்து ஆவின் சிந்தை ஜீவன் பெறும் அப்பொழுது தான் ஆவியின் கனி வெளிவரும்

உதாரணமாக: ஆவியின் கனி -9 (கலா5:22-23) அதற்கு முன்பதாக மாமிசத்தின் கனி -17(கலா5:19-21) பார்க்கமுடியும். நாம் நம்மை அர்ப்பணிக்கும்பொழுது மாமிசத்தின் கனிகள் நம்மளை விட்டு அகன்று ஆவியின் கனியினால் நிரப்பப்படுவோம்.

கனி கொடுக்கிறவர்கள்

- பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்படிய
- கர்த்தரின் வேதத்தில் பிரியமாயிருக்க
- பரிசுத்த சபையில் நாட்டப்பட

வேண்டும்

ஆவியின் கனி- 9 கலா 5:22-23

அன்பு
சந்தோஷம்
சமாதானம்

உங்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள தொடர்பு

நீடியபொறுமை
தயவு
நற்குணம்

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள தொடர்பு

விசுவாசம்
சாந்தம்
இச்சையடக்கம்

தனிப்பட்ட தொடர்பு

முடிவாக....

பிதாவை மகிமைபடுத்தும் உன்னத ஆராதனை

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

யோவான்15:8

பிலி 1:10

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் **கனி**களால் நிறைந்தவர்களாகி,

கொலோ-1:10

சகலவித நற்கிரியைகளுமாகிய **கனி**களைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,

கனியினால் அறியப்படும்.

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு.....
ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள மத்7:15-20



மரமானது அதின் கனியினால் அறியப்படும்.
மத் 12:33

கனியற்ற வாழ்க்கையானால்...

இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், **நல்ல கனிகொடாதமரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.** மத்-3:10

வேதாகமத்திலிருந்து, கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன் ஒன்றையும் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.

அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும் **நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்,** கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், **இனிமேல் இதை வெட்டிப்போடலாம்** என்று சொன்னான் என்றார். **லூக் 13:6-9**

அன்பு சகோதரனே!

1பேதுரு 1:23 ன் படி அழிவில்லாத வித்தினால் மறுபடியும் பிறந்த நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருந்து பரிசுத்த ஆவியானவர் துணையோடு

✓வேதம் வாசிப்பு

✓ஜெபம்

✓விசுவாசத்தை

செயல்முறையில் கொண்டுவரும்பொழுது விதை வளர்ந்து கனியை கொடுத்துகிறது அப்பொழுது பிதா மகிமைப்படுகிறார்

....முற்றும்